# அபிவிருத்திப் பொருளியல்

## இதழ் - 5

# Development Economics

## Issue - 5

**Young Economist Association**
**Department of Economics**
**University of Jaffna.**
**Sri Lanka.**
**2014**

# அபிவிருத்திப் பொருளியல்

## இதழ் - 5

## 2014

## கல்வியாண்டு - 2011/2012

**பேராசிரியர் நா.பாலகிருஷ்ணன்**
**அவர்களின் முதலாம் ஆண்டு நினைவாக**
**வெளியிடப்படும்**
**சிறப்பு இதழ்**


பிரதம இதழாசிரியர்
செல்வி. த. சகிதா

இணை இதழாசிரியர்கள்
திரு. எஸ். இந்துசன்
திரு. எஸ். தர்மராஜ்



இளம் பொருளியலாளர் மன்றம்
பொருளியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

# சர்வதேச வர்த்தகமும் தீர்வையற்ற வர்த்தகத் தடைகளும்

*Mr. S.S.Uthayakumar,*
*Head & Senior Lecturer,*
*Department of Economics,*
*University of Jaffna.*

## அறிமுகம்

இக்கட்டுரையானது இரண்டு பகுதிகளாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. அந்த வகையில் முதலாவது பகுதியில் சர்வதேச வர்த்தகம் பற்றிய சுருக்கமான அறிமுகமும் இரண்டாவது பகுதியில் சர்வதேச வர்த்தகம் தொடர்பாகக் காணப்படுகின்ற தடைகள் பற்றிய விடயமும், அதிலும் குறிப்பாக தீர்வைகளற்ற தடைகள் பற்றிய அடிப்படை விளக்கமும் அமைந்துள்ளது.

## பகுதி I

## சர்வதேச வர்த்தகம் பற்றிய அறிமுகம் -

சர்வதேச வர்த்தகம் (International Trade), என்பது சர்வதேச எல்லைகள் அல்லது பிரதேசங்களுக்கு அப்பால் பொருட்களையும் சேவைகளையும் பரிமாற்றம் செய்வதாகும். வரலாற்றின் அதிகளவான காலப்பகுதி முழுவதும் சர்வதேச வர்த்தகம் என்பது இருந்து வந்துள்ளது. இதன் அடிப்படையில் இந்த சர்வதேச வர்த்தகத்தினது பொருளாதார, சமூக மற்றும் அரசியல் முக்கியத்துவமானது, அண்மைக்கால நூற்றாண்டுகளில் மிக மிக அதிகரித்து வந்துள்ளது. கைத்தொழில்மயமாக்கத்தால் (Industrialisation), முன்னேற்றகரமான போக்குவரத்து (Transportation), உலகமயமாக்கல் (Globalisation), பல்தேசியக் கூட்டுத் தாபனங்கள் (Multi National Corporations), வெளிமூலங்கள் (Out Sourcing) போன்றவை யாவும் இந்த சர்வதேச வர்த்தகத்தில் பாரிய விளைவை ஏற்படுத்துகின்றன. உலகமயமாக்கலின் பிரதான அர்த்தம் அதிகரித்த சர்வதேச வர்த்தகம் என்பதாகும்.

சர்வதேச வர்த்தகம் (International Trade) என்பது, பொருளியலின் (Economics) ஒரு கிளையாக(branch) உள்ளதுடன் சர்வதேச நிதியுடன் (International Finance) சேர்ந்து பொருளியலின் ஒரு பாரிய கிளையாக, சர்வதேசப் பொருளியல் (International Economics) அமைகின்ற வகையில் இதனை நாம் பின்வருமாறு மிகவும் சுருக்கமாக நோக்குவது பயன்மிக்கதாகும்.

### ❖ சர்வதேச வர்த்தகக் கோட்பாடு (International Trade Theory)

இன்று உலகிலுள்ள எந்த ஒரு நாடும் தமது நாட்டு மக்களுக்குத் தேவையான சகல பொருட்களையும் தாமே உற்பத்தி செய்து விடுவதில்லை. அவ்வாறு செய்ய முடிவதுமில்லை. இதனால் ஒவ்வொரு நாடும் சில பொருட்களை உற்பத்தி செய்து அவற்றில் ஒரு பகுதியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற அதே நேரம் தமக்குத் தேவையான சில பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலையிலேயே உள்ளன. இந்த நிலையில் என்ன பொருட்களை உள்நாட்டு நுகர்வுக்

காக உற்பத்தி செய்ய வேண்டும்? என்ன பொருட்களை ஏற்றுமதிக்காக உற்பத்தி செய்ய வேண்டும்? என்ன பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும்? என்பன பற்றி அடம் ஸிமித் (Adam Simith) காலம் தொட்டு இன்று வரை பலராலும் பல கருத்துக்கள் தெரிவிக் கப்பட்டு வந்துள்ளன. {உதாரணமாக அடம் ஸிமித்தின் முழுநயக் கோட்பாட்டையும் டேவிட் றிக்காடோவின் (David Ricardo) ஒப்பீட்டு நயக் கோட்பாட்டையும் சேர்த்து சர்வதேச வர்த்தகம் பற்றிய பழம் பொருளிய லாளர் கோட்பாடென அழைப்பர்}. இவையே வர்த்தகக் கோட்பாடுகள் என அழைக்கப்படு கின்றன. இவ்வகையில் வர்த்தகக் கோலங் களை எதிர்வு கூறவும், தீர்வைகள் போன்ற வர்த்தகக் கொள்கைகளின் விளைவுக ளைப் பகுப்பாய்வு செய்வதற்கும் பல்வேறு பட்ட மாதிரிகள் உத்தேசிக் கப்பட்டு வந்துள் ளன அவற்றை மிகவும் சுருக்கமாக நோக்கு வோம்.

## ➢ றிக்காடோவின் மாதிரி (Ricardian Model)

றிக்காடோவின் மாதிரி ஒப்பீட்டு அனுகூலத் தின் மீது முக்கிய கவனம் செலுத்து கின்றது. சர்வதேச வர்த்தகக் கோட்பாட்டில் இது ஒரு வேளை மிகவும் முக்கிய எண்ணக் கருவாக இருக்கலாம். ஒரு றிக்காடியன் மாதிரியில் நாடுகள் தாம் சிறப்பாக உற்பத்தி செய்யும் பொருட்களை உற்பத்தி செய்வதில் சிறப்புத் தேர்ச்சி பெறுகின்றன. ஏனைய மாதிரிகளைப் போலன்றி றிக்காடியன் சட்டமைப்பு (Ricardian Frame Work) பரந்தளவிலான பொருட்களை உற்பத்தி செய்வதற்குப் பதிலாக நாடுகள் முழுமை யான சிறப்புத் தேர்ச்சி பெறும் என எதிர்வு கூறுகின்றது. அத்துடன் றிக்காடியன் மாதிரி யானது ஊழியச்சார்பு அளவுகள் மற்றும் ஒரு நாட்டில் உள்ள முதல் போன்ற காரணி வழங்கல்களை நேரடியாகக் கருத்திற் கொள்வதில்லை.

## ➢ கெக்சர் ஒலின் மாதிரி {Heckscher- Ohlin Model (H.O Model)}

அடிப்படை ஒப்பீட்டு அனுகூலத்தின் றிக்காடி யன் மாதிரிக்கு ஒரு மாற்றீடாக உருவாக் கப்பட்டது. அதனது பெரும் சிக்கலான தன்மை இருந்த போதிலும் கூட அதனது எதிர்வு கூறல்களில் அது அதிகளவு துல்லி யமானதாகக் காணப்படவில்லை. எவ்வாறா யினும் கோட்பாட்டு நோக்கில் பார்க்கும் போது, சர்வதேச வர்த்தகக் கோட்பாட்டினுள் நவபழம்பொருளியல் விலைப் பொறி முறையை (Neo-Classical Price Mecha nism) இணைப்பதன் மூலம் ஒரு சிறந்த தீர்வினை அது வழங்கவே செய்கின்றது. காரணி வழங்கல்களில் உள்ள வேறுபாடு களால் சர்வதேச வர்த்தகத்தின் கோலம் தீர்மானிக்கப்படுவதாக இக்கோட்பாடு வாதிடு கின்றது. உள்ளூரில் மிகையாக உள்ள காரணிகளைத் தீவிரமாகப் பயன்படுத்திச் செய்யப்படுகின்ற பொருட்களை நாடுகள் ஏற்றுமதி செய்யும் எனவும் உள்ளூரில் தட் டுப்பாடாக உள்ள காரணிகளைச் செறிவாகப் பயன்படுத்தும் பொருட்களை அந்த நாடுகள் இறக்குமதி செய்யும் எனவும் இக்கோட்பாடு எதிர்வு கூறுகின்றது. H.O. மாதிரியுடன் கூடிய அனுபவத்தினை பிரச்சினைகளுடன், லியன்ரிவ் முரண்பாடு (Leontief Paradox) என அழைக்கப்படுகின்றது. இப்பிரச்சி னைகள் Wassily Leontief என்பவரால் மேற்கொள்ளப்பட்ட அனுபவ ரீதியான பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்பட் டுள்ளன. மிகையான முதலை அமெரிக்கா கொண்டிருந்த போதிலும் ஊழியச் செறிவான பொருட்களை ஏற்றுமதி செய்யும் தன்மை கொண்டதாக அமெரிக்கா இருப்பதை இவர் கண்டறிந்தார்.

## ➢ குறிப்பான காரணிகள் (Specific Factors)

இந்த மாதிரியில் கைத்தொழில்களுக்கு இடையே உள்ள ஊழிய நகர்வு சாத்திய மாக உள்ளது. இதே வேளை குறுங்காலத் தில் கைத்தொழில்களிடையே முதல் நகர்வற்றுள்ளது. பௌதீக முதல் போன்ற உற்பத்தியின் குறுங்கால குறிப்பான காரணி கள் கைத்தொழில்களிடையே சுலபமாகப் பரிமாற்றம் செய்ய முடியாது என்பதைக்

குறிப்பான காரணிகள் என்று பெயர் குறிப்பிடு கின்றது. ஒரு பொருளின் விலையில் அதிகரிப்பு இருக்குமானால் அப்பொருளுக் குரிய உற்பத்திக் காரணிகளின் உடமை யாளர்கள் உண்மை நியதிகளில் இலாபம் அடைவார்கள் என இக்கோட்பாடு தெரிவிக் கின்றது. இதற்கும் கூடுதலாக உற்பத்தியின் எதிரெதிரான குறிப்பான காரணிகளின் உடமையாளர்கள் (அதாவது ஊழியம் மற்றும் முதல்) ஊழியத்தின் குடிவரவின் மீதான கட்டுப்பாடுகளுக்கு ஆதரவு தேடுகை யில் எதிரெதிரான நிகழ்ச்சித் திட்டங்களை அல்லது நிகழ்வுகளைக் கொண்டிருக்கும் சாத்தியம் உள்ளவர்களாக இருக்கின்றனர். இதற்கு மாறாக முதல் வழங்கலில் ஓர் அதிகரிப்பில் இருந்து உண்மை நியதிகளில் இவ்விரு காரணி உடமையாளர்களும் (முதல் மற்றும் ஊழியம்) இலாபம் அடை கின்றார்கள். குறிப்பிட்ட கைத்தொழில்க ளுக்கு இம்மாதிரி மிகவும் பொருத்தமான தாகும். வருமான விநியோகத்தை விளங்கிக் கொள்வதற்கு இம்மாதிரி பொருத்தமானதாக இருந்த போதிலும் வர்த்தகத்தின் கோலத்தை விபரிப்பதற்கு இது பொருத்தமானதல்ல.

## ➢ ஈர்ப்பு அல்லது கவர்ச்சி மாதிரி (Gravity Model)

வர்த்தகத்தின் கவர்ச்சி மாதிரியானது மேலே விபரிக்கப்பட்ட அதிக கோட்பாட்டு ரீதியான மாதிரிகளிலும் பார்க்க வர்த்தகக் கோலங் களின் அதிக அனுபவ ரீதியான பகுப்பாய் வினை இது வழங்குகின்றது. கவர்ச்சி மாதிரியானது அதனது அடிப்படை வடிவில் நாடுகளுக்கிடையிலான தூரத்தை அடிப்படை யாகக் கொண்ட வர்த்தகத்தையும் நாடுக ளின் பொருளாதார அளவுகளின் செயற்பாடு களையும் எதிர்வு கூறுகின்றது. இந்த மாதிரி நியூட்டனின் ஈர்ப்பு விதியைப் (Nuwtonian Law of Gravity) பிரதி செய்வதாக உள்ளது. இந்த நியூட்டனின் விதியில் இரு பொருட்களுக்கு இடையேயான தூரமும் பௌதீக அளவும் கருத்திற் கொள்ளப்படு கின்றது. இந்த மாதிரியானது பொருளியல ளவைப் பகுப்பாய்வின் (Econometric analysis) மூலமாக அனுபவ ரீதியான வலிமை கொண்டதென நிரூபிக்கப்பட்டுள் ளது. வருமான மட்டம் நாடுகளிடையேயான இராஜதந்திர தொடர்புகள் மற்றும் வர்த்தகக் கொள்கைகள் போன்ற ஏனைய கார ணிகளும் இந்த மாதிரியின் விரிவாக்கப்பட்ட வடிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## ❖ சர்வதேச வர்த்தகத்தின் ஒழுங்குபடுத்தல் (Regulation of International Trade)

வர்த்தகமானது பாரம்பரியமாக இருநாடு களுக்கிடையேயான இரு தரப்பு உடன் படிக்கைகள் (Bilateral treaties) மூலமாக ஒழுங்குபடுத்தப்படுகின்றன. வாணிபவா தத்தின் (Mercantilism) நம்பிக்கையின் கீழ் பல நூற்றாண்டுகளாக அனேகமான நாடுகள் உயர்வான தீர்வைகளையும் (Tariffs) சர்வ தேசவர்த்தகத்தின் மீதான பல கட்டுப்பாடு களையும் கொண்டிருந்தன. 19ஆம் நூற் றாண்டில் விசேடமாக பிரித்தானியாவில் (Britain) சுதந்திர வர்த்தகத்தில் (Free Trade) நம்பிக்கை அதிமுக்கியம் வாய்ந்த தாக அமைந்திருந்தது. அன்றிலிருந்து இக்கருத்து பெரும்பாலான காலப்பகுதியில் மேற்கு நாடுகளிடையே சிந்தனையில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளது. இரண்டாம் உலக யுத்த வருடங்களில் இருந்து தீர்வை கள் மற்றும் வர்த்தகம் தொடர்பான பொது உடன்பாடு (General Agreement on Tarffs and Trade- GATT) மற்றும் அதன் பின் உலக வர்த்தக நிறுவனம் (World Trade Organization -WTO) போன்ற பல்தரப்பு உடன்படிக்கைகள் (Multilateral Treaties) உலகளாவிய ஒழுங்குபடுத்தப்பட்ட வர்த்தகக் கட்டமைப்பை உருவாக்க முயன்று வந்துள்ளன.

சுதந்திர வர்த்தகமானது உலகில் உள்ள பொருளாதார ரீதியில் மிகவும் சக்தி வாய்ந்த நாடுகளால் வழமையாக மிகவும் பலமாக ஆதரிக்கப்பட்டு வருகின்றது. இருந்த போதி லும் விவசாயம் மற்றும் புடவைகளுக்கு அமெரிக்காவிலும் (United States) ஐரோப் பாவிலும் (Europe) விதிக்கப்பட்ட பாதுகாப் புத் தீர்வைகள் போன்ற, உள்நாட்டில்

அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த கைத்தொழில்களுக்கான தெரிவுப்பாதுகாப்பு வாதத்தில் (Selective Protectionism) அவை அடிக்கடி (இந்த நாடுகள்) ஈடுபடுகின்றன. Netherlands, மற்றும் United Kingdom ஆகிய நாடுகள் பொருளாதார ரீதியில் ஆதிக்கம் உள்ளவையாக இருந்த போதிலும் சுதந்திர வர்த்தகத்தைப் பலமாக ஆதரித்தன. இன்று United States, United Kingdom, Australia மற்றும் Japan ஆகிய நாடுகள் சுதந்திர வர்த்தகத்தை மிகவும் கூடுதலாக ஆதரிக்கும் நாடுகளாக உள்ளன. எவ்வாறாயினும் வேறுபல நாடுகள் (India, China, Russia ...போன்ற நாடுகள்) பொருளாதார ரீதியில் அவை அதிக சக்தி மிக்க நாடுகளாக உருவாகி வருகையில் சுதந்திர வர்த்தகத்தை அதிகரித்தளவில் ஆதரிக்க ஆரம்பித்து வருகின்றன. தீர்வைகளின் மட்டங்கள் வீழ்ச்சியடைகையில் வெளிநாட்டு நேரடி முதலீடு (Forejgn Direct Iinvestment -FDI) பெறுதல் Procurement மற்றும் வர்த்தக வசதியாக்கல் (Trade Facilitation) உள்ளடங்கலான தீர்வையற்ற நடவடிக்கைகளைப் பேசித்தீர்ப்பதற்கு அதிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது. வர்த்தக வசதியாக்கல் வர்த்தகம் மற்றும் சுங்க நடைமுறைகளை (Customs procedures) நிறைவு செய்வதுடன் சம்மந்தப்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயத்தைக் கவனத்தில் கொள்கின்றது. தயாரிப்புத் துறைகள் பெரும்பாலும் பாதுகாப்பு வாதத்தை ஆதரிக்கையில் பாரம்பரிய விவசாய நலன்கள் வழமையாக சுதந்திர வர்த்தகத்துக்கு ஆதரவாக உள்ளன. எவ்வாறாயினும் அண்மைக்காலங்களில் இதில் ஓரளவு மாற்றம் ஏற்பட்டுள்ளது. உண்மையில் United States, Europe மற்றும் Japan போன்ற நாடுகளில் உள்ள விவசாயத்துக்கு ஆதரவான தன்மை சர்வதேச வர்த்தக உடன்படிக்கைகளில் உள்ள குறிப்பிட்ட விதிகள் அமைவதற்கு பிரதானமாகப் பொறுப்பாக உள்ளது. இந்த உடன்படிக்கைகள் வேறு அனேகமான பொருட்கள் மற்றும் சேவைகளை விட விவசாயத்தில் உள்ள அதிகளவு பாதுகாப்புவாத (Protectionist) நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்குகின்றன. மந்தகாலப் (Recessions Period) பகுதியின் போது உள்நாட்டுக் கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காகத் தீர்வைகளை அதிகரிப்பதற்கு உள்நாட்டில் அதிகளவு அழுத்தம் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. உலக வர்த்தகத்தின் உடைவுக்கு (Collapse) வழிவகுத்த பாரிய மந்த நிலையின் (Great Depression) போது இது உலகெங்கிலும் நிகழ்ந்தது. இதனால் மந்த நிலையை இது மிகவும் மோசமாக்கியது எனப் பலர் நம்புகின்றனர்.

சர்வதேச வர்த்தக ஒழுங்குபடுத்தலானது உலகளாவிய மட்டத்தில் WTO இனூடாக மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன் தென் அமெரிக்காவில் **MERCOSUR** போன்ற வேறுபல பிராந்திய ஒழுங்கமைப்புக்கள் ஊடாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. United States, Canada மற்றும் Mexico, மற்றும் European Union என்பவற்றிற்கு மிடையிலான 27 சுதந்திர அரசுகளிடையே **NAFTA** ஊடாகவும் மேற்கொள்ளப்படுகின்றது. 2005 இல் நடை பெற்ற அமெரிக்காவின் சுதந்திர வர்த்தகப் பகுதியில் Free Trade Area of the Americas (FTAA) திட்டமிடப்பட்ட நிறுவுதல் பற்றிய Buenos Aires பேச்சுவார்த்தை (talks) இலத்தீன் அமெரிக்க நாடுகளில் (Latin American Nations) மக்களிடம் இருந்த எதிர்ப்பினால் பெரும்பாலும் தோல்வியுற்றது. பல்தரப்பு முதலீட்டு உடன்படிக்கைகள் {Multilateral Agreement on Investment (MAI)} போன்ற வேறு உடன்படிக்கைகளும் கூட அண்மைக் காலங்களில் தோல்வியுற்றன.

## ❖ சர்வதேச வர்த்தகத்தில் உள்ள ஆபத்துக்கள் (Risk in International Trade)

சர்வதேச வர்த்தகத்தில் உள்ள ஆபத்துக்களை அவை உருவாகும் சூழ்நிலைகள் சந்தர்ப்பங்களைக் கவனத்தில் கொண்டு நோக்கும் போது அவற்றை நாம் பின்வருமாறு:

- பொருளாதார ஆபத்துக்கள் (Economic Risks)
- அரசியல் ஆபத்துக்கள் (Political Risks) என இரு பாரிய பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

இங்கு பொருளாதார ஆபத்துக்கள் மற்றும் அரசியல் ஆபத்துக்கள் என்பன உருவாகக் கூடிய சூழ்நிலைகள் அல்லது சந்தர்ப்பங்கள் என்ற வகையில் நோக்குவோமாயின், முதலில் :

- வாங்குபவர்களின் வங்குரோத்து நிலை
- கொடுப்பனவு செய்ய நீண்ட காலம் தாமதித்தல் அதாவது ஆறு மாதத்திற்குள் செலுத்தத் தவறுதல்
- ஏற்றுக்கொள்ளாமல் விடும் ஆபத்து
- பொருளாதார இறைமையை சரணாகதி அடையச் செய்தல் போன்றவற்றை பொருளாதார ஆபத்துக்கள் என அழைக்கப்படும்

அடுத்து:

- ஏற்றுமதி இறக்குமதி உரிமைகளை இரத்துச் செய்தல் அல்லது புதுப்பிக்க மறுத்தல்
- யுத்த ஆபத்துக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஆபத்துக்கள்
- இறக்குமதியாளர்களின் கப்பல்களைப் பறிமுதல் செய்தல் அல்லது நாடு கடத்துதல்
- பொருட்களைக் கப்பலில் ஏற்றிய பின்னர் இறக்குமதி செய்வதற்குத் தடை விதித்தல்
- மாற்றம் செய்வதில் உள்ள ஆபத்துக்கள் – அதாவது இறக்குமதி செய்யும் பொருட்கள் மீது செலாவணிக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுதல் அல்லது அந்நிய நாணயத் தட்டுப்பாடுகள் நிலவுதல் மூலம் ஏற்படும் ஆபத்துக்கள் போன்றவற்றை அரசியல் ஆபத்துக்கள் என அழைக்கப்படும்

இவ்வாறாக சர்வதேச வர்த்தகம் தொடர்பாக சர்வதேச வர்த்தகக் கோட்பாடுகள் பற்றி றிக்காடோவின் மாதிரி, கெக்சர் ஒலின் மாதிரி, குறிப்பான காரணிகள் மற்றும் ஈர்ப்பு அல்லது கவர்ச்சி மாதிரி பற்றியும் அடுத்து சர்வதேச வர்த்தகத்தின் ஒழுங்குபடுத்தல் பற்றியும் சர்வதேச வர்த்தகத்தில் உள்ள ஆபத்துக்கள் பற்றியும் மிகவும் சுருக்கமாக இப்பகுதியில் நோக்கப்பட்டுள்ளதுடன் அடுத்து வரும் பகுதியில் வர்த்தகம் தொடர்பாகக் காணப்படுகின்ற தடைகளில் தீர்வை தொடர்பான தடைகள் பற்றிய சிறு அறிமுகத்துடன் தீர்வையற்ற தடைகள் பற்றி சற்று விரிவாக நோக்கப்பட்டுள்ளது.

# பகுதி II

## சர்வதேச வர்த்தகத்தில் தீர்வையற்ற வர்த்தகத் தடைகள் பற்றிய அறிமுகம்

சுதந்திர வாத்தகம் (Free Trade) உலக வெளியீட்டை உச்சப்படுத்தி சகல நாடுகளுக்கும் நன்மை புரிவதாகக் குறிப்பிடுகின்றது. இருந்த போதிலும் நடைமுறையில் சகல நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தின் (International Trade) சுதந்திரமான பாய்ச்சலின் மீது சில தடைகளை விதிக்கின்றன. இத்தகைய கட்டுப்பாடுகளும் (Restrictions) ஒழுங்கு விதிகளும் (Regul ations) நாடுகளின் வர்த்தகம் மற்றும் வாணிபம் ஆகியவற்றைக் கையாளுகின்றமையால் அவை பொதுவாக வர்த்தக அல்லது வாணிபக் கொள்கைகள் (Trade or Commercial Policies) என அறியப்படுகின்றது. வர்த்தகத் தடைகள் தேசிய நலன் என்ற நியதிகளில் மாற்ற முடியாதவாறு நியாயப்படுத்தப்படுகையில் யதார்த்தத்தில் நாடுகளில் உள்ள, இவ்வாறான தடைகளில் இருந்து அனுகூலம் பெறுகின்ற விசேட குழுக்களினால் இவை வழமையாக ஆதரவளிக்கப்படுகின்றன. வர்த்தகத் தடை (Trade Barrier) யின் மிக முக்கியமான வகை என்ற வகையில் வரலாற்று ரீதியாக, தீர்வை (Tariff) என்பதே இருந்து வருகின்றது. தீர்வை என்பது வர்த்தகம் செய்யப்படும் பண்டம் தேசிய எல்லையைக் கடந்து செல்லும் போது அறவிடப்படுகின்ற ஒரு வரி (Duty) ஆகும். எனினும் சர்வதேச வர்த்தகச் சுற்றோட்

டத்தில் தடைகளை ஏற்படுத்துகின்ற காரணி களை அவற்றின் தன்மையைக் கவனத்தில் கொண்டு, அதாவது, வர்த்தகம் தொடர்பான தடைகளைத் தீர்வைகள் (Tariff) ஏற்படுத் துமாயின் அவற்றைத் **'தீர்வைத் தடைகள் (Tariff Barriers)** எனவும் தீர்வையல்லாத காரணிகள் ஏற்படுத்துமாயின் அவற்றைத் **தீர்வையற்ற தடைகள் (Non Tariff Barri ers)** எனவும் நாம் பிரதானமாக இரு பிரிவுகளாகப் பகுத்து நோக்கலாம்.

இப்பகுதியில் முதலில் தீர்வைகளைப் பற்றி சுருக்கமாக நோக்குவதுடன் அதன் பின்னர் வர்த்தகம் தொடர்பான தீர்வையற்ற தடை கள் (Non - Tariff Barriers) பற்றி சற்று விரிவாக நோக்குவோம்.

வர்த்தகம் செய்யப்படும் பண்டம் தேசிய எல்லையைக் கடந்து செல்லும் போது அறவிடப்படுகின்ற ஒரு வரி (Duty) அல்லது கட்டணமே தீர்வை (Tariff) எனப்படும். இத்தீர்வையினை நாம் இறக்குமதித் தீர்வை (Import Tariff) மற்றும் ஏற்றுமதித் தீர்வை (Export Tariff) என இருவகைப்படுத்தலாம். இங்கு இறக்குமதித் தீர்வை என்பது இறக்கு மதி செய்யப்படும் பண்டத்தின் மீதான ஒரு வரியாகவும் ஏற்றுமதித் தீர்வை என்பது ஏற்றுமதி செய்யப்படும் பண்டத்தின் மீதான ஒரு வரியாகவும் விளங்குகின்றன. இவற்றில் ஏற்றுமதித் தீர்வைகளை விட இறக்குமதித் தீர்வைகள் மிக முக்கியமானவையாகும். ஏற்றுமதித் தீர்வைகள் அமெரிக்க அரசியல் அமைப்பினால் தடை செய்யப்பட்டுள்ள போதிலும் கூட அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளால் {Developing Countries– (DCs)} அவற்றின் பாரம்பரிய ஏற்றுமதிகள் (Traditional Exports) மீது பெரும்பாலும் விதிக்கப்படுகின்றன. {கானா (Ghana) அதனது கோக்கோ மீதும், பிரேசில் (Brazil) அதனது கோப்பி மீதும் விதிக்கப்படுபவை போன்று} இந்த நாடுகள் சிறந்த விலைக ளையும் கூடிய வருவாயையும் பெறுவதற் காக ஏற்றுமதித் தீர்வையை அறவிடு கின்றன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் வருவாய்களை உயர்த்துவதற்கு ஏற்றுமதித் தீர்வைகளில் அதிகம் தங்கியுள்ளன. ஏனெ னில் அவற்றின் சேகரிப்பு சுலபமாக உள்ளத னால் ஆகும். மறுபுறத்தில் கைத்தொழில் நாடுகள் மாற்றமுடியாதவாறு தீர்வைகளை விதிக்கின்றன. அல்லது சில {வழமையாக ஊழியச் செறிவுள்ள (Usually Intensive Labour)} கைத்தொழில்களைப் பாதுகாப் பதற்காக வேறு வர்த்தகத் தடைகளை விதிக்கின்றன. இதே வேளை வருவாயை உயர்த்துவதற்கு அவை பெரும்பாலும் வருமான வரியைப் பயன்படுத்துகின்றன.

இவ்வாறு வர்த்தகச் செயற்பாடுகளின் போது அறவிடப்படுகின்ற தீர்வையானது அறவிடப் படுகின்ற தன்மையின் அடிப்படையில், பெறுமதி அடிப்படையிலான தீர்வை (ad Valorem Tariff) அலகு அடிப்படையிலான குறிப்பான தீர்வை (Specific Tariff) மற்றும் கூட்டுச் சேர்ந்த அல்லது கலவைத் தீர்வை (Compound Tariff) என்ற வகையில் இருக்க முடியும். அதே போல இருப்பின் மூலமான விளைவுகளை அடிப்படையாகக் கொண்டு பெயரளவிலான தீர்வை (Nominal Tariff) பயனுறுதி வாய்ந்த அல்லது செயல்படு தீர்வை (Effective Tariff), தடைசெய்யக் கூடிய தீர்வை (Prohibitive Tariff) மற்றும் உத்தம தீர்வை (Optimum Tariff) என்ற வகையிலும் பல வகைகளில் நோக்க முடி யும். இக்கட்டுரையில் தீர்வையற்ற தடைகள் பற்றியே சிறப்பாக நோக்க உள்ளதால் தீர்வைகள் பற்றி இங்கு விரிவாக நோக்காது தீர்வையற்ற தடைகள் பற்றியே அடுத்து சற்று விரிவாக நோக்கப்பட்டுள்ளது.

வர்த்தக செயற்பாடுகளின் போது தீர்வை வடிவில் அல்லாத ஏனைய வடிவங்களில் காணப்படும் தடைகளை நாம் தீர்வையற்ற தடைகள் (Non - Tariff Barriers) எனலாம். இந்த வகையில், தீர்வையற்ற தடைகளை நாம் அத்தடைகள் ஏற்படுகின்ற வழிகள், தடைகளின் தன்மை மற்றும் தடைகளின் தாக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு நாம் தீர்வையற்ற தடைகளை பாகுபடுத்தி நோக்க முடியும். இந்த வகையில் தீர்வையற்ற தடைகள் என்ற வகையில்: அனுமதிப்பங்கு அல்லது கோட்டா (Quotas), தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் (Voluntary Export Restraints), தொழில்நுட்ப,

**நிர்வாக மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள்** (Technical, Administrative and other Regulations), **சர்வதேச கார்ட்டல்** (International Cartels), **குவித்தல்** (Dumping) மற்றும் **பொருளாதார ஒருங்கிணைப்பு** (Economic Integration) என வகைப்படுத்த முடியும். இவற்றை விட **அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு, பல்நாணயமாற்று விகித அறிமுகம், அரச வர்த்தக தனியுரிமை, உள்நாட்டில் கொள்வனவு செய்யும் சட்டம்,** மற்றும் **நுகர்வோர் நலப் பாதுகாப்புத் திட்டம்** என்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறுவகையான செயற்பாடுகள் கூட தீர்வையற்ற வர்த்தகத்தடைகளாகவே விளங்குகின்றன. இந்த வகையில் மேற்படி தீர்வையற்ற வர்த்தகத் தடைகள் தொடர்பான ஒரு அடிப்படை விளக்கத்தினைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் சற்று விரிவாக இத்தீர்வையற்ற தடைகள் பற்றி நோக்கப்பட்டுள்ளது.

## 01. அனுமதிப்பங்கு அல்லது கோட்டா (Quotas)

தீர்வையற்ற தடைகளில் அனுமதிப்பங்கு மிகவும் முக்கியமானது. இது நேரடியாக வர்த்தகத்தில் தொகை ரீதியான தடையை ஏற்படுத்துகிறது. அதாவது குறிப்பிட்டளவு பொருட்களை, ஏற்றுமதி செய்யவும் இறக்குமதி செய்யவும் அனுமதிக்கின்றது. இதில் ஏற்றுமதி அனுமதிப் பங்கு என்பதனை விட இறக்குமதி அனுமதிப்பங்கு முக்கியமானதாகக் காணப்படுகிறது. இறக்குமதி அனுமதிப்பங்கு முறையானது ஓர் நாட்டினது கைத்தொழிலைப் பாதுகாக்கவோ, விவசாயத்தைப் பாதுகாக்கவோ, சென்மதி நிலுவையினைப் பாதுகாக்கவோ பயன்படுத்தப்படலாம். இரண்டாம் உலக யுத்தத்தின் பின் மேற்கத்தேய ஐரோப்பாவில் இறக்குமதி அனுமதிப்பங்கு பொதுவானதாக இருந்துள்ளது. இன்று கைத்தொழில் நாடுகள் தங்கள் விவசாயத்தினைப் பாதுகாக்கவும் வளர்ச்சியடைந்துவரும் நாடுகள் இறக்குமதிப் பதிலீட்டினை ஊக்குவிக்கவும் சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும் இறக்குமதி அனுமதிப் பங்கினை பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஓர் நாடானது குறிப்பிட்ட கேள்வி நிரம்பல் நிலைமைகளில் மிகைக் கேள்வி (Excess Demand) காணப்படும் போது அந்த மிகைக் கேள்வியினை இறக்குமதி செய்வதன் மூலம் நிவர்த்தி செய்யலாம். இந்த நிலையில் குறிப்பிட்ட நாடானது இறக்குமதி அனுமதிப் பங்கு முறையினைக் கையாண்டால் அது மிகைக் கேள்வி முழுவதனையும் இறக்குமதி செய்ய முடியாது. அத்துடன் இறக்குமதி அனுமதிப்பங்கினால் உள்ளூரில் குறிப்பிட்ட பொருளின் விலை உயர்வடையும். அதனைத் தொடர்ந்து உள்ளூர் உற்பத்தியும் ஓரளவு அதிகரிக்க வாய்ப்பு இருக்கும். ஆனால் மொத்த நுகர்வு மட்டம் ஓரளவு குறைவடைய வாய்ப்புண்டு. இந்த நிலையில் குறிப்பிட்ட நாடு இறக்குமதி அனுமதிப் பங்கினைக் கையாளும் போது ஏற்படும் தாக்கமானது எவ்வாறாக இருக்குமெனில் உள்ளூர் உற்பத்தி அதிகரிக்கின்ற அதே வேளை நுகர்வின் அளவும் குறைவடைகின்றது. இதனால் குறிப்பிட்ட நாடானது உள்ளூர் உற்பத்தியினைப் பாது காப்பதுடன் இறக்குமதியின் அளவினைக் குறைப்பதனால் சென்மதி நிலுவைப் பிரச்சினையிலிருந்தும் விலக முடிகின்றது.

## 02. தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் (Voluntary Export Restraints):

ஓர் இறக்குமதி நாடு இன்னொரு நாட்டினது ஏற்றுமதிகளைத் தானாகவே முன் வந்து குறைத்துக்கொள்ளுமாறு கோருதலை **'தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்'** எனஅழைக்கப்படும். எங்கும் உயர்ந்தளவிலான வர்த்தகக் கட்டுப்பாடுகள் காணப்படும் போது முழு உள்நாட்டு உற்பத்தியும் பாதிப்படையக் கூடிய சூழ்நிலை இருக்குமாயின் இவ்வாறான நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். 1950களிலிருந்து தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் ஐக்கிய

அமெரிக்காவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வகையில், ஐரோப்பாவின் ஆடைத்தொழில் மீது முதன்முதலாக கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு பின்னர் உருக்கு, பாதணி, ஏனைய உற்பத்திகள் என்பவற்றுடன் உலகின் ஏனைய நாடு களுக்கும் இச்செயற்பாடானது நீடிக்கப்பட்டது. சில வேளைகளில் இது சந்தைப்படுத்தல் கட்டளைகளை ஒழுங்காக்கல் செய்கின்ற ஒரு செயற்பாடு எனவும் அழைக்கப்படுகின்றது. இவ்வாறான தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஐக்கிய அமெரிக்காவையும் ஏனைய கைத்தொழில் நாடுகளையும் தொடர்ந்தும் சுதந்திர வர்த்தகத்தின் ஆதரவாளர் என்ற தோற்றப்பாட்டை உலகுக்கு உணர்த்தும் ஒரு கருவியாக அமைந்தன.

இவ்வாறான தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமையும்போது அது இதற்குச் சமனான இறக்குமதி அனுமதிப் பங்கினை எல்லா வழிகளிலும் ஒத்திருக்கும். இருப்பினும் வருமான விளைவு (Revenue Effect) தவிர்க்கப்பட்டிருக்கும். இந்த வருமான விளைவினை வெளிநாட்டு நிரம்பலாளர்கள் விலைகளை உயர்த்துவதனூடாகப் பெற முயற்சிப்பார்கள். தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் என்பது இறக்குமதிகளைக் குறைக்கும் செயற்பாட்டில் இறக்குமதி அனுமதிப் பங்கை விடக் குறைந்த செயற்றிறன் வாய்ந்ததாகும். ஏனெனில் தன்னியல்பான ஏற்றுமதிக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் ஏற்றுமதி நாடுகளாலேயே மேற்கொள்ளப்படுவதுடன் இவை தமது ஏற்றுமதிகளை விருப்பமற்ற நிலையிலேயே குறைத்துக் கொள்கின்றனர். மேலும் இந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கை பிரதான ஏற்றுமதி நாடுகளையே கருத்தில் கொள்வதால் இந்த நாடுகள் தமது ஏற்றுமதியில் குறைத்துக் கொள்ளும் அளவினை வேறு சிறிய ஏற்றுமதியாளர் நாடுகள் பூர்த்தி செய்ய முயலலாம். அதே சமயம் வேறு நாட்டின் ஊடாகவும் பிரதான ஏற்றுமதியாளர் நாடுகள் நிரம்பலை மேற்கொள்ள முயலலாம்.

## 3. தொழில்நுட்ப, நிர்வாக மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகள் (Technical, Administrative and other Regulations) :

சர்வதேச வர்த்தகத்தில் தொழில்நுட்ப நிர்வாக மற்றும் ஏனைய ஒழுங்கு விதிகளும் தடையை ஏற்படுத்துகின்றன. இவற்றுள் மோட்டார்வண்டி, மின்சார உபகரணங்களுக்கான பாதுகாப்பு ஒழுங்கு விதிகளும் உடல் ஆரோக்கியத்தைப் பேணும் உற்பத்திகளுக்கும் (Hygienic Production) இறக்குமதி செய்யப்படும் உணவு உற்பத்தியின் பொதியிடலுக்குமான சுகாதார ஒழுங்கு விதிகளும் உற்பத்தி இடத்தினையும் உள்ளடக்கங்களையும் காட்டுவதற்கான முத்திரை பதிக்கும் தேவையும் (Labeling Requirements) உள்ளடங்கும். ஆனாலும் இந்த ஒழுங்குவிதிகளில் பல, சட்ட (Legal) சம்பந்தமான நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்ற அதேவேளை சில, இறக்குமதிகளில் தடையை ஏற்படுத்துவதற்கு பயன்படுகிறன எனலாம்.

ஏனைய வர்த்தகத் தடைகள் அரசாங்க உள்நாட்டு நிரம்பலாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யும் போது தேவையேற்படும் சட்டங்களிற்கேற்ப தோற்றம் பெறுகின்றன. உதாரணமாக 1933இல் பிரகடனப்படுத்தப்பட்ட அமெரிக்கன் கொள்வனவு சட்டத்தின் படி (Buy American Act) ஐக்கிய அமெரிக்க அரசாங்கப் பிரதிநிதிகள் உள்ளூர் நிரம்பலாளர்களுக்கு 12% வரையிலான விலையுயர்வினை வழங்கினர். வர்த்தகத் தாராளமயமாக்கலின், டோக்கியோ சுற்றுப் (Tokyo Round) பேச்சின் ஒரு பகுதியில் ஐக்கிய அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் இந்த நடைமுறையினையும் ஒழுங்கு விதிகளையும் திறந்த ரீதியில் ஏற்று வெளிநாட்டு நிரம்பலாளர்களுக்கும் சந்தர்ப்பம் கொடுத்தனர்.

அண்மைக் காலங்களில் கடவை வரியில் (Border Taxes) கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இவை ஏற்றுமதியாளருக்கு உள்ளக மறைமுக வரிகளுக்காக, கழிவாக வழங்கப்படுவதுடன் இறக்குமதியாளர் மீது அறவிடப்படுகின்றது. உதாரணமாக

ஐக்கிய அமெரிக்காவில் மறைமுக வரிக ளாக தீர்வையும் விற்பனை வரியும் உள்ளன. ஐரோப்பாவில் கூட்டப்பட்ட பெறுமதி வரியும் காணப்படுகின்றது.

## 04. சர்வதேச கார்ட்டல் (International Cartels) :

குறிப்பிட்ட ஒரு பொருளினை உற்பத்தி செய்யும் வேறுபட்ட நாடுகளின் இணைப் பினை 'சர்வதேச கார்ட்டல் (International Cartels)' எனலாம். இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் யாதெனில் வெளியீட்டி லும் ஏற்றுமதியிலும் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதற்கான ஓர் உடன்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட ளவு உச்ச இலாபத்தினைப் பெறுதலாகும். ஆயினும் உள்ளூர் கார்ட்டல் (Domestic Cartels) ஐக்கிய அமெரிக்காவில் சட்ட விரோத மானது. ஐரோப்பாவில் தடை செய்யப்பட் டுள்ளது. சர்வதேச கார்ட்டலின் சக்தியினை மதிப்பிடுவது கடினம். ஏனெனில் எந்தவொரு நாட்டினதும் சட்டத்தினால் சர்வதேச கார்ட்டலின் சக்தியை இழக்கச் செய்ய முடியாது.

இன்று எல்லோராலும் பேசப்பட்டு வருவதும் வெற்றிகரமாக செயற்படுவதுமான 'பெற்றோலிய ஏற்றுமதி நாடுகள் நிறுவனம் (OPEC – Organization of Petroleum Exporting Countries)' சர்வதேச கார்ட்டலாக அமைகின்றது. இது 1973–74 இடைப்பட்ட காலப்பகுதியில் உற்பத்தியி னையும் ஏற்றுமதியினையும் கட்டுப்படுத்தி மசகு எண்ணெயில் வெற்றிகரமாக நான்கு மடங்கு விலையுயர்வினைப் பெற்றது. சர்வதேச கார்ட்டல் அமைப்பிற்கான ஓர் உதாரணமாகச் சர்வதேச வான் போக்கு வரத்துச் சங்கத்தினையும் (International Air Transport Association) குறிப்பிடலாம். சர்வதேச கார்ட்டல் அமைப்பு மிகவும் வெற்றிகரமானதாக அமைய வேண்டுமாயின் குறிப்பிட்ட பொருள் அத்தியாவசியமான தாகவும் குறைந்த சர்வதேச நிரம்பலாள ரையும் கொண்டிருப்பதுடன் குறிப்பிட்ட பொருளுக்கு சிறந்த பதிலீடு இல்லாமலும் இருக்க வேண்டும். ஒபெக் அமைப்பு இவ்வாறான பண்புகளைக் கொண்டமைந் துள்ளது. குறிப்பிட்ட பொருளுக்குப் பதிலீடு காணப்படுமாயின் சர்வதேச கார்ட்டல் அமைப்பு உற்பத்தியினையும் ஏற்றுமதியி னையும் கட்டுப்படுத்தி உயர்ந்த விலையி னைப் பெற்றுக் கொள்ள முடியாது. வெற்றி கரமான சர்வதேச கார்ட்டல் அமைப்பானது ஒரு தனியுரிமை நிறுவனமாகவும் மொத்த இலாபத்தினை உச்சப்படுத்தக் கூடியதாகவும் அமையும்.

## 5. குவித்தல் (Dumping) :

குவித்தல் என்பதிலிருந்தும் வர்த்தகத் தடை ஏற்படுகின்றது. குவித்தல் என்றால் என்ன? என்பதற்குப் பின்வருமாறு விளக்கம் கூறலாம். குறிப்பிட்ட ஓர் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள் அந்த நாட்டில் விற்பனை செய்யப்படுகின்ற விலையிலும் பார்க்கக் குறைந்த விலையில் மற்றைய நாட்டில் விற்பனை செய்யப்படுவதனைக் குறிக்கும். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்குப் பொருள் இறக்குமதி செய் யப்படும் போது போக்குவரத்துச் செலவு, வரிகள் போன்றவை இருக்கும். அந்த நிலை யிலும் கூட குறைந்த விலையில் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதனையே குவித்தல் என்பது குறிக்கின்றது. இத்தகைய குவித்தல் நடவடிக்கையானது மூன்று வகையாக அமைகின்றது. அவையாவன 1. தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் (Persistent dumping), 2. இடைக்கிடை ஏற்படும் குவித்தல் (Predatory dumping), 3. எப்போதாவது ஏற்படும் குவித்தல் (Sporadic dumping) என்பவையாகும்.

இங்கு தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் என்பது அதிகளவில் பாதக விளைவினை ஏற்படுத்துவதில்லை. தொடர்ந்தேர்ச்சியான குவித்தல் மூலம் குறித்த நாட்டில் உள்ள நுகர்வோர் குறைந்த விலையில் பொருட் களைத் தொடர்ந்து கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும். எப்போதாவது ஏற்படும் குவிப்பினாலும் அதிகளவில் பாதக விளைவு ஏற்படமாட்டாது. ஆனால் இடைக்கிடை ஏற்படும் குவிப்பே (Predatory dumping)

இங்கு முக்கியமானதாகும். ஏனெனில் இடைக்கிடை ஏற்படும் குவிப்பு குறித்த நாட்டில் குறிப்பிட்ட தொழிலினை வளர விடாமல் தடுப்பதாக அமைவதாலாகும். எனவே குறிப்பிட்ட நாட்டில் குறிப்பிட்ட தொழில் வளரக் கூடாது என்பதற்காகச் செய்யப்படும் குவிப்பினைத் தடுக்கும் நோக்குடன் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் எனக் கூறப்படுகின்றது.

## 6. பொருளாதார ஒருங்கிணைப்பு (Economic Integration) :

சர்வதேச வர்த்தகத்தில் தடையை ஏற்படுத்தும் ஒரு காரணியாகப் பொருளாதார ஒருங்கிணைப்பு என்பது அமைகின்றது. நாடுகள் ஒன்று சேர்ந்து வர்த்தகத்தில் உள்ள தடைகளை முற்றாகவோ அல்லது பகுதியாகவோ நீக்கும் பொருட்டு பொதுவான வர்த்தகக் கொள்கைகளை ஏற்படுத்திக் கொள்வதனையே அல்லது கடைப்பிடிப்பதனையே 'பொருளாதார ஒருங்கிணைப்பு (Economic Integration)' எனலாம். பொருளாதார ஒருங்கிணைப்புக்கள் என்பவை:

- ❖ தெரிவுசெய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் (Preferential Trade Agreements)
- ❖ சுதந்திர வர்த்தக பிரதேசம் (Free Trade Area)
- ❖ சுங்கக்கூட்டுக்கள் ( Customs Unions)
- ❖ பொதுச் சந்தைகள் ( Common Markets)
- ❖ பொருளாதார கூட்டுக்கள் ( Economic Unions ) என்ற நிலைகளில் ஏற்படலாம்.

இங்கு **தெரிவுசெய்யப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் (Preferential Trade Agreements)** என்பது, குறிப்பிட்ட பொருளாதார ஒருங்கிணைப்பிற்குள் அமையும் போது அங்கத்துவ நாடுகள், தமக்கிடையே அங்கத்துவமில்லாத நாடுகளின் மீது விதிக்கப்படும் வரியிலும் பார்க்கக் குறைந்த தடைகளை விதிப்பதனைக் குறிக்கின்றது. உதாரணமாக 1932இல் ஐக்கிய இராச்சியம் சில நாடுகளுடன் ஏற்படுத்திக் கொண்ட பிரித்தானிய பொதுநலவாய தெரிவுத்திட்டத்தினைக் (British Common Wealth Preference Scheme) குறிப்பிடலாம்.

**சுதந்திர வர்த்தக பிரதேசம் (Free Trade Area)** என்பது பொருளாதார ஒருங்கிணைப்பிற்குள் அங்கம் வகிக்கும் நாடுகள் தமக்கிடையேயுள்ள தடைகள் யாவற்றையும் முற்றாக நீக்குவதனைக் குறிக்கின்றது. அதேவேளை அங்கத்துவமல்லாத நாடுகளுடன் தொடர்ந்தும் தடைகள் இருக்கும். உதாரணமாக 1960இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய சுதந்திர வர்த்தகச் சங்கத்தினை (European Free Trade Association) குறிப்பிட லாம்.

**சுங்கக்கூட்டுக்கள் (Customs Unions)** என்பதற்குள் உள்ளடங்கும் நாடுகளிடையே எந்தவிதத் தீர்வைகளும் இருக்கமாட்டாது. அதேவேளை அங்கத்துவ நாடுகள் அங்கத்துவமில்லாத நாடுகள் மீது ஒரு பொதுத் தீர்வையினை விதிக்கும். உதாரணமாக 1958இல் உருவாக்கப்பட்ட ஐரோப்பிய பொருளாதார சமூகம் (EEC – European Economic Community) அல்லது ஐரோப்பிய பொதுச் சந்தையினைக் (European Common Market) குறிப்பிட லாம்.

**பொதுச் சந்தை ( A Common Market)** அமைப்பினுள் உள்ளடங்கும் நாடுகளிடையே மூலதனமும் உழைப்பும் எந்தவிதமான தடையுமின்றி அசையக் கூடிய நிலை காணப்படுகின்றது. 1970இல் ஐரோப்பிய சமூகம் (European Community ) ஆனது, பொதுச் சந்தை (Common Market) என்ற நிலையை அடைந்துள்ளது.

**பொருளாதார கூட்டு ( An Economic Union)** கள் என்ற அமைப்பினுள் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் தமக்கிடையே நாணய நிதி நடைமுறைக் கொள்கைகளில் ஒத்த தன்மையினைப் பேணுகின்றன. பொருளாதாரக் கூட்டு, பொருளாதார ஒருங்கிணைப்பின் மிகச் சிறந்த நிலையாகக் காணப்படுகின்றது. உதாரணமாக 1960இல் பெல்ஜியம், நெதர்லாண்ட் மற்றும் லக்ஸம்பேர்க் நாடுகளை உள்ளடக்கிய வகையில் உருவாக்கப்பட்ட **BENELUX** ஐக் குறிப்பிடலாம். இவ்வாறாக நாடுகள் இணைந்து

பொருளாதார ஒருங்கிணைப்புக்களை ஏற்படுத்துவதால் சர்வதேச வர்த்தகப் பாய்ச்சலில் பெரியளவிலான தடைகளை ஏற்படுத்தி வருகின்றன. இவற்றை விட குறித்த நாடுகள் தத்தமது நாடுகளுக்குள் பிறநாட்டுப் பொருட்களின் இறக்குமதி களைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது குறைப்பதற்குப் பல வழிமுறைகளைக் கையாள்கின்றன. அந்த வகையில் **அந்நியச் செலாவணிக் கட்டுப்பாடு, பல் நாணயமாற்று விகிதத்தினை அமுல் படுத்தல்** எடுத்துக்காட்டாக இலங்கையில் 1968 இல் FEECS பீக்ஸ் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதைக் குறிப்பிடலாம் **அரச வர்த்தக தனியுரிமை, உள்நாட்டில் கொள்வனவு செய்யும் சட்டம்** அதாவது **உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை உள்நாட்டிலேயே கொள்வனவு செய்வதற்கான தூண்டுதலை சட்டரீதியாகக் கொண்டு வருதல்** எடுத்துக்காட்டாக இலங்கையில் 1970-77 காலப்பகுதியில் ஆடை நுகர்வு தொடர்பாக கொண்டுவரப்பட்ட கட்டுப்பாடுகள் சுட்டிக் காட்டப்படக் கூடியது. **நுகர்வோர் நலப் பாதுகாப்புத் திட்டம்** அதாவது நுகர்வோரின் நலனைக் கவனத்தில் கொண்டு தெரிவு செய்யப்பட்ட சில இறக்குமதிகள் மீதான தடையினை விதித்தல் என்ற வகையில் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் கூட ஒரு வகையான தீர்வையற்ற வர்த்தகத் தடைகள் எனலாம்.

## முடிவுரை

எனவே தொகுத்து நோக்கின் சர்வதேச வர்த்தகத்தில் ஒட்டு மொத்த உலக நலனை அதிகரிக்கும் நோக்குடன் பல வர்த்தகக் கொள்கைகள் மாற்றும் கோட்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்ற நிலை மட்டுமன்றி, உலக நலனைக் கவனிப்பதற்கென காலத்துக்குக் காலம் பல சர்வதேச அமைப்புகள் உருவாக்கம் பெற்று அவை செயற்பட்டு வந்தாலும் கூட, இன்றும் கூட உலகில் சர்வதேச வர்த்தகச் செயற்பாடுகளில் உலக நலன் பாரபட்சமின்றிப் பேணப்பட்டு வருகின்றதா? என்ற வினாவினை ஒருவர் எழுப்புகின்ற போது அதற்கான விடையானது, "இல்லை" எனபதாகவே அமையும் இதனை யாரும் மறுக்க முடியாத யதார்த்த நிலையினையே இன்று காணக்கூடியதாக உள்ளது. உதாரணமாக இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிற்பட்ட காலத்திலிருந்து வர்த்தகம் மற்றும் தீர்வைகள் தொடர்பான வர்த்தக நடவடிக்கைகளில் கவனஞ் செலுத்தி வந்த GATT அமைப்பினது செயற்பாடுகளும், பின்னர் உருகுவே சுற்றுப் பேச்சுக்களின் பலனாக உருவாக்கப்பட்ட WTO போன்ற அமைப்புக்களின் செயற்பாடுகள், அவற்றின் தலையீடுகள் காரணமாகவும் சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளில் தீர்வைகளின் பங்கு குறைவடைந்து சென்றாலும் நடைமுறையில் தீர்வையல்லாத வர்த்தகத் தடைகளின் (Nontariff Trade Barriers) பங்கு அதிகரித்து வருவதனையே காண முடிகின்றது. எனவே சர்வதேச வர்த்தகம் (International Trade) என்பது சுதந்திர வர்த்தகம் (Free Trade) நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது எனக் கூற முடிந்தாலும் நடைமுறையில் சுதந்திர வர்த்தகம் என்பது ஒரு கோட்பாட்டு ரீதியான கருத்தாகவே உள்ளது எனக் கூறின் அது மிகையாகாது.

**உசாத்துணை நூல்கள்:**


- Dominick Salvatore 2004, International Economics Eighth edition, John Wiley & Sons, Inc.
- Robert J Carbaugh, 2004, International Economics IXth Edition, (Thomson South western).
- Giancarlo Gandolfo 2006, International Trade, (Spinger International Edition).
- Paul R. Krugman & Maurice Obstfeld 2004, International Economics theory and policy, 6th edition, Pearson education Asia Limited and Tsinnghua university press.